வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவணகுமார்

தேதி 21.1.2026 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

அடல் பென்ஷன் திட்டத்தை, 2030-31 ஆம் ஆண்டு வரை நீட்டிக்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்த, பிழையற்ற வாக்காளர் பட்டியலை பராமரித்தல் அவசியம் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார் கூறியுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட தமிழக மீனவர்களை தூதரக ரீதியில் மீட்கக் கோரி, தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், வெளியுறவு அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

விக்சித் பாரத்- ஜி ராம்ஜி திட்டத்தின் கீழ், புதுச்சேரியில், நெட்டப்பாக்கம் மற்றும் சோரியாங்குப்பத்தில் நடைபெற்று வரும் பணிகளை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று நேரில் சென்று பார்வையிட்டார்.

*அமைச்சரவை* (16)

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய பாதுகாப்பு வழங்குவதற்கான அடல் பென்ஷன் திட்டத்தை, 2030-31 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கவும், இத்திட்டம் தொடர்பான பிரச்சார பணிகளுக்கு தொடர்ந்து நிதி ஆதரவு வழங்கவும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில்,

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில், இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது. சந்தாதாரர் 60 வயதை எட்டிய பின்னர், இவரது பங்களிப்பு அடிப்படையில் மாதம் ஆயிரம் ரூபாய் முதல், 5 ஆயிரம் ரூபாய் வரை குறைந்தபட்சம் ஒய்வூதியம வழங்க, அடல் பென்ஷன் திட்டத்தில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கப்பட்ட இந்த திட்டத்தில் இதுவரை, 66 லட்சம் பேர் தங்ளை இணைத்துக் கொண்டுள்ளதும், அனைவரையும் உள்ளடக்கிய நாட்டின் சமூக பாதுகாப்பு கட்டமைப்பில், முக்கிய தூணாக இத்திட்டம் திகழ்வதும் குறிப்பிடத் தக்கது. இன்று மத்திய அமைச்சரவை மேற்கொண்ட முவுகளின் படி, இந்திய சிறு தொழில் மேம்பாட்டு வங்கிக்கு, 5 ஆயிரம் கோடி ரூபாய் பங்கு மூலதனம் வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

*பிரகதி-1 (8)*

உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில் தடைகளைக் களைந்து பணிகளை துரிதமாக நிறைவேற்றி முடிக்கும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட பிரகதி டிஜிட்டல் வசதி, உயர்நிலை தலையீடு மூலம் திட்டங்களைக் குறித்த காலத்தில் நிறைவேற்றி முடிப்பதில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக முக்கிய பங்காற்றி வருகிறது. பிரகதி வசதி மூலம் திறம்பட்ட முறையில் கண்காணித்து அமலாக்கப்படும் நிலக்கரித் துறை அமைச்சகத்தின் திட்டங்கள் குறித்து ஒரு தொகுப்பு.....

(வாய்ஸ்)

*பிரகதி-2(16)*

<u>பிரகதி தொழில்நுட்ப வசதி மூலம் தற்போது கண்காணிக்கப்படும், 3 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான, 134 திட்டங்களில், 122 திட்டங்கள், நிலக்கரி துறையுடன் தொடர்புடையதாகும். இதில், 1.19 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 16 முக்கிய திட்டங்களை, பிரதமர் திரு நரேந்திர மோடி பிரகதி வசதி மூலம் மறுஆய்வு செய்துள்ளார். இதில் 5 திட்டங்கள்</u>

ஏற்கனவே நிறைவெற்றி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வந்துள்ளன. எஞ்சிய 11 திட்டங்கள் அமலாக்க நிலையில் உள்ளன. பிரகதி மூலம் மறு ஆய்வு செய்யப்பட்ட திட்டங்களில் மட்டும் 120 பிரச்சனைகள் கண்டறியப்பட்டு, துரிதமான முறையில் தீர்வு காணப்பட்டுள்ளது. இப்பிரச்சனைகள் பெரும்பாலும், நில ஆர்ஜிதம், சுற்றுச்சூழல் அனுமதி, கட்டுமான ஒப்புதல், மற்றும் ஒழுங்குமுறை விதிகளுடன் சம்பந்தப்பட்டவையாகும். பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது குறித்து, பிரகதி மறு ஆய்வின் போது வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களால், மாநில நிலையிலும், மத்திய அமைச்சகங்களுக்கு இடையிலும் ஒருங்கிணைப்பு அதிகரித்து, அமலாக்கப் பணிகளில் முக்கிய முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளன.

*ஓம் பிர்லா* (9)

நாடாளுமன்ற இரு அவைகளும், மாநில சட்டமன்றங்களும், நாட்டின் வளர்ச்சி குறித்து பேசுவதற்கான விவாத மேடைகள் என்று மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா கூறியுள்ளார். லக்னோவில் 86 ஆவது அகில இந்திய சட்டமன்ற தலைவர்கள் மாநாட்டின் இறுதி நாள் அமர்வில் இன்று அவர் பேசுகையில், ஜனநாயக அமைப்புகளுக்கு உட்பட்டு முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவது குறித்த முக்கிய தீர்மானங்கள் மீது, விரிவான விவாதங்கள் இடம் பெற்றதாக தெரிவித்தார். உத்திரபிரதேஷ் முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், இந்தியாவின் வலுவான ஜனநாயகம், உலகிற்கே உத்வேகம் அளிப்பதாக கூறினார்.

*மனோகர்லால் மின்சாரம்* (13)

நாட்டின் மின் விநியோக நிறுவனங்கள் மின்சாரத் துறையின் முதுகெலும்பாகவே திகழ்வதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர் லால் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், மின் விநியோக நிறுவனங்களுக்கு இடையிலான, முதலாவது வருடாந்திர மாநாட்டில் அவர் பேசுகையில், மின் விநியோக நிறுவனங்களின் நிதி

ஆரோக்கியத்தை வலுப்படுத்தவே, மின்துறையில், ஸ்மார்ட் மீட்டரிங் உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்களை அரசு கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். இதனால், மின்சாரத்தின் விநியோகத்தில், வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான இழப்புகள் குறைந்திருப்பதகா அவர் கூறினார். மின் விநியோக நிறுவனங்கள், நுகர்வோரை மையமாக கொண்டு, திறம்பட்ட முறையில் செயல்படுதல் அவசியம் என்று அமைச்சர் வலியுறுத்தினார். மின் விநியோகத் துறையை, நெகிழ்வும், நீடித்த தன்மையும் கொண்ட, எதிர்காலத்திற்கு ஏற்றத் துறையாக மேம்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இராதாகிருஷ்ணன் (9)

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் இன்று கர்நாடக மாநிலம் தும்கூர் சித்தகங்கா மடத்தில், ஸ்ரீ சிவகுமார மகா சுவாமிகளின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் விழாவில் கலந்து கொண்டார். வளர்ச்சியை கொண்டு வரும் அதே வேளை, மரவுகள், நற்பண்புகள் மற்றும் பாரம்பரிய வேர்களையும் மதிக்க கூடிய நிர்வாகமே நாட்டிற்கு தேவை என்று அவர் தமது உரையில்கூறினர். பிரதமர் திரு நரேந்திரமோடி, வளர்ச்சியை பாரம்பரியத்துடன் ஒருங்கிணைத்து இருப்பதால், நாட்டு மக்கள் ஆன்மீகத்தில் ஆழமாக காலூன்றிய நிலையிலேயே, பொருளாதாரத்திலும் மேம்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் 1 (9)

ஜனநாயகத்தின் தாயான இந்தியாவில், ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்த, தகுதியுள்ள எல்லா வாக்காளர்களும் அடங்கிய, முற்றிலும் பிழையற்ற வாக்காளர் பட்டியலை பராமரித்தல் அவசியம் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், ஜனநாயகம் மற்றும் தேர்தல் மேலாண்மை குறித்த இந்திய சர்வதேச மாநாட்டில் உரையாற்றிய அவர், பிழையற்ற வாக்காளர் பட்டியலை பராமரிப்பதில் வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள், தேர்தல்

ஜனநாயகத்தின் அடிப்படைத் தூண்களாகவே திகழ்வதாக கூறினார். தலைமை தேர்தல் ஆணையரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்..........

(வாய்ஸ்)

தேர்தல் 2 (10)

(வாய்ஸ்)

இந்திய ஜனநாயகத்தின் தொன்மைச் சிறப்புகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் பேசுகையில், கி.மு 600 ஆம் ஆண்டுகளிலேயே இந்தியா, ஜனநாயகம் குறித்து சிந்திக்க தொடங்கி விட்டதாகவும், அசோகர் ஸ்தூபி மற்றும் தூண்களே இதற்கு சான்றாகும் என்றும் கூறினார். அதற்கும் பல நூறு ஆண்டுகள் முன்னர் உருவான அதர்வண வேதத்தில், கிராம சமிதிகள் குறித்து பேசப்பட்டு இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் தேர்தல் நிர்வாக அமைப்புகளின் செயல்பாடுகள் படிப்படியான முறையில் கணிசமாக மேம்பட்டு உள்ளதாக திரு ஞானேஷ்குமார் கூறினார். உலகிலேயே மிகப் பெரிய அளவிலான தேர்தல்கள் இந்தியாவில் தான் நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் 3 (10)

ஜனநாயகம் மற்றும் தேர்தல் மேலாண்மை குறித்து உலகிலேயே மிகப் பெரிய அளவில் இந்தியா ஏற்பாடு செய்துள்ள இம்மாநாட்டின் தொடக்க விழாவில், தேர்தல் ஆணையர்கள் டாக்டர் சுக்பீர் சிங் சந்து, டாக்டர் விவேக் ஜோஷி, ஜனநாயகம் மற்றும் தேர்தல் உதவிகளுக்கான சர்வதேச கழகத்தின் தலைமை செயலர் டாக்டர் கெபின் ஜமோரா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த 3 நாள் மாநாட்டில், 70 நாடுகளில் இருந்து சுமார் 100 பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். மாநாட்டின் போது பல்வேறு நாடுகளின் தேர்தல் மேலாண்மை அமைப்புகளுடன், சுமார் 40 இருதரப்பு கூட்டங்களையும், தேர்தல் ஆணையம் நடத்துகிறது.

செல்வமகள் (9)

பெண் குழந்தைகளுக்கான பேட்டி பச்சாவோ- பேட்டி படாவோ இயக்கத்தின் கீழ், கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கப்பட்ட செல்வமகள் சேமிப்பு திட்டத்தில், இதுவரை 4.53 கோடி வங்கி கணக்குகள் திறக்கப்பட்டு, மொத்தம் 3.33 லட்சம் கோடி ரூபாய் டெபாசிட் பெறப்பட்டுள்ளதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது. தற்போது இத் திட்டத்தின் கீழ், 8.2 சதவிகித அளவில் வட்டி வழங்கப்படுகிறது. செல்வமகள் சேமிப்புத் திட்டம் நாடு முழுவதும் லட்சக்கணக்கிலான பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளித்து, நம்பிக்கையின் சின்னமாகவே மாறியிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

ஸ்டாலின் (11)

இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் தூதரக ரீதியிலான நடவடிக்கைகள் மூலம் உடனடியாக மீட்க கோரி தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார். தமிழக மீனவர்களும் அவர்களது படகுகளும் இலங்கை கடற்படையினரால் மீண்டும், மீண்டும் பிடித்துச் செல்லப்படுவது, ஆழ்ந்த கவலைக்குரியது என்றும் அவர் கூறியுள்ளார். இன்று அதிகாலை கோடியக்கரை அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட 7 தமிழக மீனவர்கள் மற்றும் இரண்டு படகுகளையும் சேர்த்து, இதுவரை 90 தமிழக மீனவர்களும், 254 படகுகளும் இலங்கை வசம் இருப்பதாக தமிழக முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கைலாஷ்நாதன் (10)

விக்சித் பாரத்- ஜி ராம்ஜி திட்டத்தின் கீழ், புதுச்சேரியில், நெட்டப்பாக்கம் மற்றும் சோரியாங்குப்பத்தில் நடைபெற்று வரும் பணிகளை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று நேரில் சென்று பார்வையிட்டார். நெட்டப்பாக்கத்தில் கால்வாய் தூர்வாரும்

பணியில் ஈடுபட்ட பெண்களை அவர் சந்தித்து கலந்துரையாடினார். வேலை நாட்கள், ஊதிய விவரங்கள் மற்றும் பணியில் உள்ள சிரமங்கள் குறித்து அவர் கேட்டறிந்தார். தொடர்ந்து சோரியாங்குப்பத்தில் அறுவடை களம் ஒன்றும், நெல் சேமிப்பு கிடங்கு அமைப்பதற்கான கட்டுமான பணிகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களையும் துணை நிலை ஆளுநர் சந்தித்து கலந்துரையாடினார்.

*ஏனாம்* (4)

ஏனாமில் கால்நடைகளுக்கான ஆம்புலன்ஸ் சேவையை, மண்டல நிர்வாக அதிகாரி திரு அன்கித் குமார் இன்று தொடங்கி வைத்தார். ஏனாம் பகுதியைக்கு உட்பட்ட 8 கிராமங்களுக்கு இந்த வாகனம், வாரம் 5 நாள் சேவை வழங்கும் என எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

*வானிலை* (11)

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் இன்றும், நாளையும் வறண்ட வானிலை நிலவக் கூடும் என்றும், அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில், லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நீலகிரி மாவட்டம் மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இரவு அல்லது அதிகாலை வேளையில் உறை பனிக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில அதிகபட்சமாக, ஈரோட்டில், 33.4 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகி உள்ளது. சமவெளி பகுதிகளை பொறுத்த வரை, தர்மபுரியில் 16.5 டிகிரி செல்சியஸ், மற்றும், கொடைக்கானலில், 4 டிகிரி செல்சியஸ் குறைந்த நிலை வெப்பநிலை பதிவாகி உள்ளது.

*கிரிக்கெட்* (5)

ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையே, 5 போட்டிகள் கொண்ட 20 ஒவர் தொடரில், முதலாவது போட்டி, நாக்பூரில் இன்று மாலை நடைபெற உள்ளது.

மகளிர் கிரிக்கெட்டில், குஜராத்-உத்தரபிரதேஷ் அணிகளுக்கு இடையிலான WPL போட்டி, வதோதராவில் நாளை மாலை நடைபெறும்.

*விமான விபத்து (6)*

உத்தரபிரதேஷ் மாநிலம பிரயாக்ராஜ் அருகே இன்று இந்திய விமானப்படைக்கு சொந்தமான இலகுரக சிறு விமானம், குட்டையில் விழுந்து விபத்துக்குள்ளானது குறித்து, விமானப்படை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. குட்டையில் நீர் இருந்ததால், விமானம் தீ பிடிக்கவில்லை என்றும், விமானத்தில் இருந்த இரண்டு விமானிகள் குட்டையில் குதித்து உயிர் தப்பியதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

அடல் பென்ஷன் திட்டத்தை, 2030-31 ஆம் ஆண்டு வரை நீட்டிக்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்த, பிழையற்ற வாக்காளர் பட்டியலை பராமரித்தல் அவசியம் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார் கூறியுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட தமிழக மீனவர்களை தூதரக ரீதியில் மீட்கக் கோரி, தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், வெளியுறவு அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

விக்சித் பாரத்- ஜி ராம்ஜி திட்டத்தின் கீழ், புதுச்சேரியில், நெட்டப்பாக்கம் மற்றும் சோரியாங்குப்பத்தில் நடைபெற்று வரும் பணிகளை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று நேரில் சென்று பார்வையிட்டார்

---------------------